# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018

| தரம் - 8 | வரலாறு | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ....................................

### பகுதி – I

❖ மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. இலங்கையில் பாரியகுளங்களைக் கட்டுவதில் முன்னோடியாகத் திகழ்ந்த மன்னன்.
1) தேவநம்பியதீசன் 2) வசபன் 3) மகாசேனன் 4) தாதுசேனன்

02. கலாவாவியிலிருந்து திஸாவாவிக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட கால்வாய்.
1) ஆலிசாரக்கால்வாய் 2) திலவத்துக்கால்வாய்
3) யோதகால்வாய் 4) மினிப்பேகால்வாய்

03. குளக்கட்டு நீரினால் அரிக்கப்படுவதைத் தடுப்பதற்காக அமைக்கப்படும் குளத்தின் உறுப்பு
1) கலிங்கல் 2) கலிங்கல் தொட்டி 3)அலைதாங்கி 4) உள்வான்கதவு

04. குட்டகண்ணதிஸ்ஸ மன்னரால் அமைக்கப்பட்ட பூங்கா.
1) மகாமேகவனப்பூங்கா 2) நந்தவனப்பூங்கா
3) சிகிரியாப்பூங்கா 4) பத்மஸ்வரப்பூங்கா

05. புராதன இலங்கையின் தங்க ஆபரணக் கைத்தொழிலின் சிறப்பிற்கு சான்றான ஆதாரம் கிடைக்கப்பெற்ற அகழ்வு.
1) அபயகிரி அகழ்வு 2) ஜேதவனராமய அகழ்வு
3) ருவன்வெலிசாய அகழ்வு 4) லோயமமகாபாய அகழ்வு

06. கண்டி இராசதானியை அந்நியர் இலகுவில் கைபற்ற முடியாமல் இருந்தமைக்கான காரணங்களில் ஒன்று.
1) மக்களின் ஒற்றுமையீனம் 2) மன்னர்களின் வலிமையின்மை
3) இயற்கைப் பாதுகாப்பு 4) பிரபுக்களின் குழப்பம்

07. கண்டி இராச்சியத்தில் புதிய அரச பரம்பரையைத் தோற்றுவித்த மன்னன்
1) சேனாசம்பதவிக்கிரமபாகு 2) 1ம் இராஜசிங்கன்
3) 1ம் விமலதர்ம சூரியன் 4) 2ம் இராஜசிங்கன்

08. 1753 இல் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனால் சீயம் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட தேரர்குழு
1) உபாலிதேரர் 2) சரணங்கரதேரர் 3) கங்கராஜதேரர் 4) சுமங்கலதேரர்

09. கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதில் வெற்றிகண்ட பிரித்தானிய ஆளுனர்.
1) பிறட்றிக் நோத் 2) றொபேட்பிறவுன்றிக்
3) தோமஸ்மெயிட்லான்ட் 4) வில்லியம் கிரகரி

10. நிரல் "அ" வில் தரப்பட்ட உற்பத்திப் பொருட்களை நிரல் "ஆ" இல் உள்ள அவை உற்பத்தி செய்யும் இடங்களோடு தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் மிகச் சரியான விடைத்தொகுதி.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1) செம்பு | A கொத்மலை |
| 2) இரும்பு | B தும்பறை |
| 3) பன்புல் உற்பத்திகள் | C கிரிவவுல |

1) BCA 2) ACB 3) CAB 4) CBA

11. கண்டி இராச்சிய காலத்தில் பௌத்தசமயப் பண்பை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல ஊடகமாகக் பயன்படுத்தப்பட்டது.
1) ஓவியக்கலை 2) சிற்பக்கலை
3) மரச்செதுக்கல் 4) கட்டடக்கலை

12. கண்டி இராச்சியத்தின் கலையம்சங்களை வெளிப்படுத்தும் முக்கியமான கட்டடங்களில் ஒன்று.
1) லங்காதிலகசிலைமனை 2) ருவன்வெலிசாய
3) எம்பக்கதேவாலயம் 4) அபயகிரிவிகாரை

13. நிலத்தின் மீது மரத்தூண்களை நட்டு அதன் மேல் கட்டப்பட்ட விகாரை
1) டெம்பிட்டவிகாரை 2) தலதாமாளிகை
3) லங்காதிலகவிகாரை 4) கடலாதெனியவிகாரை

14. மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத்துறைக்குப் பங்களித்த இத்தாலி நாட்டவர்
1) சேர் தோமஸ் மூர் 2) தாந்தே
3) இராஸ்மஸ் 4) வில்லியம் ஷேகஸ்பியர்

15. கிரேக்க, உரோம கட்டடக் கலையை எடுத்துக் காட்டும் சிறந்த கலைப்படைப்பு
1) பியெட்டாசிலை 2) டேவிட்சிலை
3) புனிதயோவான்சிலை 4) புனிதபேதுருஆலயம்

16. "அனைத்தையும் விட கடவுளே சிறந்தவர்" என்றகோட்பாடு.
1) மானிடவாதக் கோட்பாடு 2) புவிமையக் கோட்பாடு
3) மெய்யியற் போட்பாடு 4) தெய்வீகக் கோட்பாடு

17. மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் பற்றிய முக்கியமான தகவலைக் கண்டறிந்தவர்.
1) வில்லியம் ஹார்வி 2) பெரசல்ஸ்
3) மைக்கல் சர்டேஸ் 4) கெப்லர்

18. கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக செயற்பட்ட சீர்திருத்த இயக்கங்களின் முன்னோடியாக விளங்கியவர்.
1) இராஸ்மஸ் 2) டொனெடெலோ 3) மைக்கல் 4) மார்ட்டின் லூதர்

19. வானியல் விஞ்ஞானத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்.
1) நிக்கலஸ் கொபர்னிக்கஸ் 2) கலிலியோ கலிலி
3) மைக்கல் சர்டேஸ் 4) ஜொஹென்னஸ் கெப்லர்

20. இத்தாலியிலுள்ள பல்கலைக் கழகங்களில் ஒன்று.
1) பாரிஸ் 2) ஒக்ஸ்போர்ட் 3) கேம்பிரிஜ் 4) பாதுவா

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடைதருக.

01. அ) இரண்டாம் தவணையில் வரலாறு பாடத்தில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இரண்டாம் தவணையில் வரலாறு பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு கருவியின் பெயரைத் தருக. (2 புள்ளிகள்)

ii. அக்கணிப்பீட்டினை மேற்கொண்ட பாடஅலகு எது? (2 புள்ளிகள்)

iii. அக்கணிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நீர் பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருட்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

iv. அக்கணிப்பீட்டினை மேற்கொண்டதால் நீர் பெற்ற நன்மைகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

ஆ) தரப்பட்ட இலங்கைப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| 1) மல்வத்து ஓயா | 5) முல்லேரியா | 9) அநுராதபுரம் |
| 2) கண்டி | 6) திருகோணமலை | 10) பராக்கிரம சமுத்திரம் |
| 3) பொலன்னறுவை | 7) யாழ்ப்பாணம் | 11) காலி |
| 4) கலாவாவி | 8) சிகிரியா | 12) கொழும்பு நகரம் |

(12 புள்ளிகள்)

02.

i. இலங்கையில் காணப்படும் பாரிய குளங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

ii. இலங்கையில் பிரதான கால்வாய்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iii. கலிங்கல் தொட்டியின் பயன்பாடு பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iv. புரதானகாலத்தில் அமைக்கப்பட்ட பொய்கைகளின் பயன்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

03.

i. கண்டி இராச்சியத்தின் மறுபெயர்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

ii. போர்த்துக்கேயரிடம் சரணடைந்து திருமுழுக்குப் பெற்ற மூவரின் பெயர் கீழேதரப்படுகின்றது. அவர்களின் திருமுழுக்குப் பெயர்களைத் தருக.
1) குசுமாசனதேவி
2) யமசிங்கபண்டார
3) கோனப்புபண்டார
(3 புள்ளிகள்)

iii. தந்துரே என்ற இடத்தில் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிட்ட மன்னன் யார்? (2 புள்ளிகள்)

iv. 1ம் விமலதர்ம சூரியனின் சமயப்பணிகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

04.

i. கண்டி இராச்சியத்தை ஆட்சிபுரிந்த நாயக்க வம்ச மன்னர்கள் நால்வரின் பெயர்களைத் தருக. (4 புள்ளிகள்)

ii. நாயக்கர் வம்ச மன்னர்கள் அரசுரிமையை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

iii. பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

05.

i. மறுமலர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

ii. இத்தாலியில் வளர்ச்சியடைந்த வர்த்தக நகரங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

iii. மறுமலர்ச்சிக் காலத்தில் பின்வரும் கலைப்படைப்புகளோடு தொடர்புபட்டவர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

1) மோனாலிசா................................................

2) இறுதித் தீர்ப்பு......................................................

3) புனிதயோவான் சிலை...........................................

4) புனிதபேதுருஆலயத்தின் சிகரம் ....................................

(டொனடெலோ, மைக்கல் ஆஞ்சலோ, ரபாயேல், லியனாடோ டாவின்சி, மைக்கல் சர்டேஸ்) (4 புள்ளிகள்)


06.


i. புவி தொடர்பாகப் புதிய கொள்கைகளை முன்வைத்த மூவரைத் தருக. (3 புள்ளிகள்)

ii. மறுமலர்ச்சிக் காலத்தில் வைத்தியத் துறைக்குப் பங்களிப்புச் செய்த மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)

iii. மறுமலர்ச்சிக் காலத்தின் கலையம்சங்கள் அதிகளவு முக்கியத்துவத்தை வழங்கிய விடயங்களைத் தருக. (3 புள்ளிகள்)

iv. மத்தியகால ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற பல்கலைக்கழகங்கள் மூன்றின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)





# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி அධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்தவொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page